திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி 3 வது வார்டு திமுக கவுன்சிலர் அனுசுயா – சிவா இல்ல பிறந்தநாள் விழா நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் கலந்துகொண்டு குழந்தையை வாழ்த்தினார். உடன் பேரூர் செயலாளர் டி.ஆர்.கே.பாபு, நிர்வாகிகள் உதயசூரியன், ஜி சித்திஅலி, என்.எஸ். மோகன், சஞ்சய் காந்தி, சுகுமார், கோகுல், சத்யா மற்றும் பலர் உள்ளனர்.

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா மிக விமர்சையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை ஓமன் திமுக செயலாளர் சிவக்குமார் துவக்கி வைக்க, அவைத்தலைவர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றிட, பொருளாளர் சிவசெந்தில் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கி நன்றி உரை ஆற்றினார். தமிழ்த்தாய் வாழ்த்துக்களோடு தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி இறுதியில் அனைவரின் மனதிலும் " கலைஞர் ஓர் சகாப்தம் என்ற எண்ணங்களோடு மீண்டும் கழக ஆட்சியினை கொண்டு வர வேண்டும் என்று உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியாக முடிந்தது.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் - கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் தலைமையில்

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள்! - 503 பேருக்கு அசைவ உணவு! - மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எஸ்.அரவிந்தரமேஷ், வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், பாலவாக்கம் தா.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 7- சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் ஏற்பாட்டில் தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கொட்டிவாக்கம் மீன் மார்க்கெட் அருகில் இன்று (07.06.2026 ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் 503 நபர்களுக்கு அசைவ உணவினை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இந்நிகழ்விற்கு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர் எஸ்.அரவிந்த ரமேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணை செயலாளர்கள் பாலவாக்கம் தா.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், சோழிங்கநல்லூர் கிழக்குபகுதி கழக செயலாளர் வி.இ.மதியழகன், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.ஹரிகிருஷ்ணன், சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.அருண்குமார், வட்டக கழக செயலாளர் கே.வி.சாந்தப்பன், பகுதி அவைத்தலைவர் எஸ்.ஜானகிராமன், பகுதி பொருளாளர் எம்.பாஸ்கரன், பகுதி துணைச்செயலாளர் ஜி.விஜயகுமார் உள்ளிட்ட வட்ட கழக நிர்வாகிகள் பார்த்தசாரதி, இ.சீனு, பிரேம்குமார், காந்தி, குப்பன், ராஜா, ராமு, சிவசங்கர், நாகம் மாள்காந்தி, துரைசாமி, காத்தாண்டி, மோகன்குமார், ராமதாஸ், வெங்கடேசன், ராஜேஷ், கெவின், செந்தில், விவேக், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வட்ட இளைஞரணி நிர்வாகிகள், வட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இலக்கிய அணியை சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

ஏ.ஜெ. பவுல் ஏற்பாட்டில் – என்.இ.கே. மூர்த்தி முன்னிலையில்

திருவேற்காட்டில் - கலைஞர் பிறந்தநாள் மாபெரும் கால்பந்து போட்டி!

மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூன் 7 தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருவேற்காடு நகரம் அயனம்பாக்கத்தில் மாபெரும் கால்பந்து போட்டி நடைபெற்றது.

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல் ஏற்பாட்டிலும், திருவேற்காடு நகரக் கழக செயலாளர் என்.இ.கே. மூர்த்தி முன்னிலையிலும் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இறுதிப் போட்டியை தொடங்கி வைத்தார்.

பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாபெரும் கோப்பை மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கி பாராட்டினார். தொடர்ந்து பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டதுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறப்புரையாற்றிய ஆவடி சா.மு. நாசர், "இளைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து, விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் கலைஞர் அவர்கள் பல்வேறு திட்டங்களை உருவாக்கினார். அந்த வழியில் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான முன்னாத்தை திமுக அரசு விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சி, ஊக்கத்தொகை, வேலை வாய்ப்பு முன்னுரிமை, விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 'தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை' மூலம் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டுத் திறனை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவிளையாட்டுத் துறையில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், கழக நிர்வாகிகள் ம. விநாயகம், டி. தெய்வசிகாமணி, பிரதானம், ஐ. ஜேக்கப், செல்ல துரை, விஜய் சாரதி, அப்பு (எ) ஜெபராஜ், ஆ. நாராயணன், நரேஷ்குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! க.வினோத் தலைமை!

எழும்பூர் வடக்குப் பகுதியில் புத்தெழுச்சி நாள் மாபெரும் இரத்ததான முகாம்!

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன் 7 - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி 6" "முத்தமிழ் உணர்வு ரத்தத்தில்! முன்னேற்ற கழகம் நெஞ்சத்தில்! எனும் தலைப்பில் மாபெரும் இரத்ததான முகாம் இன்று (07.06.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு, பெரம்பூர், பேரக்ஸ் சாலையில் உள்ள லட்சுமி மஹாலில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ.மணி, புரசை ஜி.தாமோதரன், வே.உமாகாந்த், த.நந்தீஸ்வரன், அ.நிர்மலாதேவி, எல்.சுந்தர்ராஜன், பரிதி இளம் சுருதி எம்.சி, கே.கோகுல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரத்ததான முகாமினை கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா இ.பரந்தாமன், சரிதா மகேஷ்குமார் எம்.சி, ப.மீ.யாழினி மற்றும் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, த.ஜெயக்குமார், பா.பிரபாகரன், இ.பி.கார்த்திக், என்.ஜெ.மதன்குமார், ஆ.அஜித்குமார் (எ) ஜெபா, எ.ஆர்.யாசர், அராபத், பி.டில்லி கணேஷ், சே.பாலாஜி, ரா.கார்த்திக், பா.சங்கர், ஐ.சூர்யா, அ.அவினாஷ், கோ.சந்தோஷ்குமார், மு.முகம்மது பிலால், லோ.சுகுமாறன், ஜெ.சிலம்பரசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

78 வது வட்டக் கழகச் செயலாளர் சு.மனோகர், 78 (அ) வட்டக் கழகச் செயலாளர் ந.பாலு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா:

தொ.மு.ச. பேரவை சார்பில் கொடியேற்றல் - முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு!

சென்னை வடக்கு திட்ட மின் கழக தொ.மு.ச. செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார்!

சென்னை, ஜூன்.7- திராவிட மாடல் நாயகர் கழக தலைவர் அன்புத்தளபதி அவர்களின் அறிவிப்பிற்கினங்க தமிழினத்தின் பெருமை, சமூகநீதியின் பேராளி, உழைக்கும் மக்களின் உற்ற தோழன், தொழிலாளர்களின் காவலர், ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், முத்தமிழின் மாமேதை, நமது உயிரினும் மேலான தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழா வருகிற 03.06.2026 அன்று தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், சென்னை வடக்கு திட்டம் சார்பில் சிறப்பாகவும் எழுச்சியுடனும் கொண்டாடப்பட்டது

மின்வாரிய தொழிலாளர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காகவும், தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பிற்காகவும் எண்ணற்ற வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்தியவர் தலைவர் கலைஞர். தனது ஆட்சிக் காலங்களில் மின்வாரிய ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வுகளை வழங்கியதுடன், ஏறக்குறைய 71,600 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மாமனிதர் ஆவார்.

மின்வாரிய தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வலிமையான கவசமாக விளங்கும் அரசாணை எண் 100, முத்தரப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திய பெருமை தலைவர் கலைஞர் அவர்களையே சாரும். இன்று மின்வாரிய தொழிலாளர்கள் அனுபவிக்கும் பல்வேறு நலன்களின் அடித்தளமாக அவரது தொலைநோக்குப் பார்வையும் தொழிலாளர் பாசமும் திகழ்கிறது.

அவரது உயரிய கொள்கை வழியில் பயணிக்கும் கழகத் தலைவரின் தலைமையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் மின்வாரிய தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத வகையில் இருமுறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் தனியார்மய முயற்சிக்கு அடிபணியாமல், தலைவர் கலைஞர் உருவாக்கிய தொழிலாளர் நலக் கொள்கைகளும் உரிமைகளும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

காலை 9.00 மணியளவில் சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார்பேட்டை கோட்டம், நாப்பாளையம் அலுவலகத்தில்,110 கே.வி.மணலி துணை மின் நிலையத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, தொ.மு.ச. பேரவை கொடியேற்றி, இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது மதியம் 1.30 மணியளவில் சென்னை வடக்கு திட்டம் சார்பில் தண்டையார்பேட்டை கோட்டம் மணலி புதுநகர் வினாயகர் முதியோர் அன்பு இல்லத்தில் உள்ள முதியோர் அனைவருக்கும் அறுசுவை உணவு தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் மாநில முன்னாள் தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் வழங்கினார் உடன் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் பொருளாளர் டி..அருள்,து.தலைவர்கள் ஏ.ராஜேந்திரன்,சி.சிவப்பிரகாசம் திட்ட துணை செயலாளர்கள் ஆர்.சங்கர், வேதமணி தண்டையார்பேட்டை கோட்ட செயலாளர் எம்.இளங்கோவன் கோட்ட தலைவர் கணபதி, நாம் பாளையம் கிளை ரவி,முத்து, ஜெயசந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் 77 அ வட்டத்தில் என்.எஸ்.கே. பூங்கா அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா வட்டச் செயலாளர் வி.அபாய் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர் பாபு வழிகாட்டுதலோடு எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு எம்.சி.. கழக செய்தி தொடர்பாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு, ஆவின் மோர், குளிர்பானம், தண்ணீர் பாட்டில், இனிப்பு ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார்கள் இந்நிகழ்வில் நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.

வரலாற்று நெடுந்தொடர் கலைஞர்!



பண்பாட்டுப் பகலவனே!
பார் போற்றும் தமிழ் மகனே!
திராவிடத்துத் திரவியமே!
திக்கெட்டும் ஒளியாகி
தமிழர் திசையாகி நின்றவனே!

உழைப்பாலே பூமியுனை
சுற்றி வர வைத்தவனே!உன்
கரகரத்த குரலாலே
காந்தத் தமிழ் செய்தவனே!
உன் ஈர்ப்பு விசை தானே
எம் இனத்தின் வரலாறு!

நீ பிறந்த போது
உன் கையில் தமிழ்க்கொடி
இருந்திருந்தால்
தொப்புள் கொடியில் கூட
கொடியேற்றி மகிழ்ந்திருப்பாய்..!

எம் தலைவா!
நீ தமிழர் திசையெங்கும்
லட்சம் கொடியேற்றி
லட்சிய கொடியேற்றி
கொடிகம்பங்களை எல்லைகளாக்கி
தமிழ் மொழியினம் பாதுகாத்தாய்!
தமிழரை வாழ வைத்தாய்!

முடிவேயில்லாத
வரலாற்று நெடுந்தொடர் நீ !!

உனக்கே ..... உனக்கே ....
இடமில்லை என்றார்கள்
மூன்றாவது அணுகுண்டு வீசப்படாமல்
உலகம் அதிர்ந்தது!

உன்னை தனக்குள்
புதைத்து கொள்ள அல்ல
விதைத்துக்கொள்ள
அன்றைய நாளில்
உலகத்தமிழர்களின்
அத்தனை இதயமும்
மொரினா கடற்கரையாய்
மாறிய அதிசயம் நிகழ்ந்தது!

நீ பூக்களை வென்றவன்!
குவளை மலர்கள்
சுருக்கலில் கண் மலரும் முன்னரே
விழித்தெழுந்து பூக்களை வென்றவன்!

காதுகளால் படித்தவன்!

பெரியார், அண்ணா
பேச்சை கேட்டே
பேரறிவு பெற்றவன்.முத்தமிழ் அறிஞனானாய்!

கண்களால் பேசியவன்
சூரியப் பார்வையால்
தமிழராட்சியை பிரகடனம் செய்தவன் நீ!

கு.வாஞ்சிநாதன்
தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர்
கடலூர்

இராயபுரம் 48வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு இரா.பாலன் தலைமையில் கழகக் கொடி ஏற்றி இனிப்பு, காலை அறுசுவை சிற்றுண்டி வழங்கப்பட்டது. மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் முன்னிலையில் இராயபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரிம் ஆர்.மூர்த்தி, தா. இளைய அருணா, வ.பெ சுரேஷ், இரா.செந்தில்குமார் , ந.சண்முகம் , விஜயலட்சுமி, விஜயகுமார் எம்.சி., கு.ரமேஷ், எஸ்.ரமேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், இரா.பொன்முடி மற்றும் கா.சாமுண்டீஸ்வரி, எஸ்.தங்கவாசுகி, என்.சிவக்குமார் டபிள்யூ.எஸ்.ரவிச்சந்திரன், பி.பாலாஜி, என்.ஹையத் பாஷா , எல்.ராஜா, எச்.பாபு பாய், பி.அன்பழகன் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.